23. கல்லூரி ஆசிரியர்களுக்கு விருதுகள்.

இந்த வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்பட்டு தனியாக பரிசீலிக்கப்படும்.

24. அரசுக் கல்லூரி ஆசிரியர்களை ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தல்.

பணி மூப்பின் படியும், பல்வேறு பாடங்கள் கற்பிப்போர் இடம் பெறும் வாய்ப்பு கிடைக்கும் படியும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அனைத்து அரசு கல்லூரிகளையும் ஒருமித்த ஒரு நிறுவனமாகக் கருதி செயல்பட வேண்டியிருக்கிறது.

மேற்கூறிய அரசின் முடிவுகளை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவார்களென நம்புகிறேன்.

(திரு. வசந்த பை எழுந்து பேச முயன்றார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை நான் பார்த்துக்கொள்கிறேன். அதைப் பற்றிக் கேள்வி ஒன்றும் கேட்கக் கூடாது.

6. கவன ஈர்ப்பு.

(1) பதவி உயர்வு பெற்ற முதனிலைத் தமிழாசிரியர்களுக்கு பதவி உயர்வு பெற்ற தேதியிலிருந்து பணி வரன்முறைப் படுத்தப் படாதது குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, "இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக 30 வயதுக்கு முன்னால் நியமிக்கப்பட்டு முதனிலைத் தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று, தகுதிகாண் பருவம் முடியப் பெற்றவர்களுக்கு, அவர்கள் எந்தத்தேதியிலிருந்து பதவி உயர்வு பெற்றார்களோ, அந்தத் தேதியிலிருந்து அவர்களது பணிவரன் முறைப்படுத்தப்படாமல் இருப்பதால், மாநில அளவில், குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டம் அரசினர் உயர்நிலைப் பள்ளயில் பணி புரியும் தமிழாசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மேலவையின் 42-வது விதியின் கீழ் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே. 1-4-1970-க்குப் பின் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பின்னர் இவ்வாசிரியர்கள்

முதனிலைத் தமிழாசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால், முதனிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி, பதவி உயர்வு அளிக்கப்பட்டனர். இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியிலிருந்து முதனிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி, பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதனிலைத் தமிழாசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கத் தேவையில்லை என்றும், இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி, முதனிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து (முதனிலைத் தமிழாசிரியர் பணி) வரன் முறை படுத்தலாமென்று அரசு குறிப்பாணை எண் 5471/பி2/76-9 கல்வி நாள் 17-8-76-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அவர்களது பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-1970-க்கு பின் செய்யப்படும் எல்லா நியமனங்களும், தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகளின் படிதான் செய்யப்படவேண்டும். அதற்குமாறாக சில முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்ட கழக விதிகளின்படி எல்லா நியமனங்களையும் செய்து வந்தனர். மாவட்ட கழக விதி முறைப்படி பணியில் சேர்வதற்கு வயது வரம்பு இல்லை. அதன்படி 1-4-1970-க்கு பின்பும் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், ஒரு சிலர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். எனவே 1-4-1970க்குப் பிறகு மாவட்ட கழக விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டவர்களின் விஷயத்தில் கல்வித் தகுதி, மற்றும் வயது வரம்பு சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப அரசாணை (நிலை) எண் 765. கல்வி, நாள் 16-5-74ல் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில், 1-4-70க்குப்பிறகு நியமனம் செய்யப்பட்டு 21-3-74ல் ஒரு வருட பணிக்காலம் நிரம்பப் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் மற்றும், தனித்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் சார்பாக தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகள் 6, 7ஐ (வயது வரம்பு மற்றும் கல்வி தகுதி பற்றியது) தளர்த்தி, இவர்களின் பணியை, 21-3-1974 முதல் வரன்முறைப் படுத்த ஆணையிடப்பட்டது. ஆகவே இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டபோது, 30 வயதுக்கு மேற்பட்டு இருந்து, பின்னர் முதனிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு, 21-3-1974 முதற் கொண்டுதான் அவர்களது பணியை வரனமுறைப்படுத்த வேண்டுமென்று அரசு குறிப்பாணை, எண் 89091/பி2/77-2 கல்வி நாள் 27-9-77ல் ஆணையிடப்பட்டது. எனவே, 1-4-70க்குப் பின் 30 வயதுக்கு மேற்பட்டும், அரசுப் பணியில் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு தமிழ்நாடு கல்வி சார்புபணி விதிகளின்படி கல்வித் தகுதி, மற்றும் வயது வரம்பினைத் தளர்த்தி ஆணையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர்கள் முதனிலைத் தமிழ் ஆசிரியர்களாக பதவி உயர்வு கொடுத்த அதே நாளிலிருந்து அவர்களது பணியை வரன்

முறைப் படுத்தும் நிலை ஏற்படவில்லை. இந்நிலை எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்ற இந்த அறிவிப்போடு இந்த அறிக்கையோடு நேற்றைய தினம் நான் இது தொடர்பாக தந்த உறுதியின்படி இதைப் பரிசீலிக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(2) சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி. பிளாண்ட் ரசாயனக் கழிவு நீரால் தோட்டக் காடுகள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதோடு வீரக்கல்புதூர் ஊராட்சிப் பகுதிகளில் விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படுவது குறித்து.

(பிற்பகல் 5-10)

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி பிளாண்ட், ரசாயனக் கழிவு நீரால் ஊற்றுநீர் கெட்டுத் தோட்டக்காடுகளில் உள்ள மரங்கள் பட்டுப் போவதோடு, பயிர்கள் முளைக்காத சதுப்பு நிலமாக மாறியதால் வீரக்கல்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டதோடு, அப்பகுதி சதுப்பு நிலமாக மாறி வருவது குறித்து''

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சேலம் மாவட்டத்தில் உள்ள கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும் மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் இரசாயனக் கழிவு நீரால் பி. என். பட்டி, வீரக்கல்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள கிணறுகளின் நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மக்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் மேற்சொன்ன கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன என்று பொதுசுகாதாரம், தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆய்வு செய்யப்பட்ட 294 கிணறுகளில் 187 மண்ணிட்டு மூடப்பட்டுவிட்டன. இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் 107 கிணறுகளுள் பாசனக் கிணறுகள் 27 பருகு நீர்க் கிணறுகள் 80 ஆகும். பாசனக் கிணறுகள் 27-ல் 5 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும், 2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 20 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. பருகுநீர்க் கிணறுகள் 80ல் 16 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும் 6 பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 58 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. தண்ணீரின் தரத்தைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்காக, பயன்படுத்தத் தகுதியற்ற